
# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2015 டிசெம்பர் ~ 2016 ஜனவரி ~ பெப்ரவரி வெளியீடு



அவர் என்னைப் புல்லுள்ள
இடங்களில் மேய்த்து,
அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில்
கொண்டுபோய் விடுகிறார்.
சங்கீதம் 23:2

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகளடங்கிய,
ஆவிக்குரிய வாழ்வில்
வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய
**ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில்
நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.
இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள்
ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைவதும்
இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக
ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக
ஏற்றுக்கொள்வதுவுமே
எங்களுடைய ஜெபமாயுள்ளது. கிறிஸ்தவ
ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச
சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள்
பெற்றுக்கொள்ள விரும்பினால்
கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை பூர்த்தி
செய்து கீழ்வரும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# மீட்கப்பட்டவர்களின் மீள் மகிழ்ச்சி

**'கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும் சந்தோக்ஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள் சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்' ஏசாயா 35:10.**

தேவ கிருபையின் அற்புதத்தைச் சற்றே பாரீர். உன்னுடைய வாழ்க்கை முழுவதும் வனாந்தரத்தைப் போல பாழாக்கப்பட்டிருந்தாலும், நமது ஆண்டவர் சொல்லுவதாவது "நான் திருத்துவேன், நான் சீர்திருத்துவேன் நீ இழந்து போனதையெல்லாம் மறு-படியும் உனக்குத் தருவேன் என்பதே".

எல்லாவற்றையும் அவர் நமக்குத் திரும்பத் தருகிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கிறது! நாம் இழந்து போன-வற்றையெல்லாம் அல்லது சூறையாடி பாழாக்கப்பட்டதையெல்லாம் மறுபடியும் நமக்கு கொடுத்து ஒரு நஷ்டமும் ஆகாதது போல எல்லா-வற்றையும் நேர்த்தியாக நன்மையாக அவர் செய்கிறார். பாவத்தினாலும், தோல்வியினாலும் பாழாய்ப் போன வருடங்களையெல்லாம் தேவ கிருபை திரும்ப நமக்களிக்கிறது.

அது மாத்திரமல்ல, நீ இழந்தை-தயும், முன்பு உன்னிடமிருந்ததையும், கொள்ளையடிக்கப்பட்டதையும் விட மிக அதிகமாகத் தேவன் உனக்கத் திருப்பித் தருகிறார்.

அப்படியானால் நீ அவரை பூரண-மாக ஏற்றுக் கொள். மிக அன்பாகவும், கிருபையாகவும், இலவசமாகவும் அவர் கொடுக்கின்ற அவருடைய மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள். நீ ஒன்றையும் அறைகுறையாகப் பெற வேண்டாம். அவர் எல்லாவற்றையும் கொடுக்கிறார் என்ற போதிலும், எல்லா-வற்றையும் திரும்பவும் கேட்கிறார்.

அதாவது, உன்னுடைய அன்பு முழுவதையும் சிறிதளவேனும் குறை-யாமல் எல்லாவற்றையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள ஆசிக்கிறார். அப்போது மாத்திரமே சந்தோஷமும், மகிழ்ச்சியும், துதியும், கீதமும் உன் உள்ளத்தில் குடிகொள்ளும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உன்னுடைய பெலனாயிருக்கும்.

"என்னுடைய சந்தோஷம்
உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும்,
உங்கள் சந்தோ'ம் நிறைவாய்
இருக்கும்படிக்கும், இவைகளை
உங்களுக்குச் சொன்னேன்".
யோவான் 15:11

அனுதின தேவ இரகசியத்திலிருந்து
சகோ. பக்த் சிங்

# புத்தம் புதியவொரு வருடம் 2016

நாம் புதியவொரு ஆடையையோ, புத்தகத்தையோ, பாத்திரத்தையோ, வீட்டையோ வேறு ஏதும் ஒரு புதியதை பெறும் வேளையில் அதற்காக பழைய-வைகளை அப்புறப்படுத்தி விட்டு ஆயத்தமாக மாட்டோமா? புதிய பாத அணியொன்றை பெற்று அணிய ஆயத்தமாகும் போது பாதங்களை கழுவி சுத்தமான பின்னல்லவா அதை முறையோடு அணிவோம்?

அதேபோன்று தான் தேவதயவால் இவ்வருடத்தை பாதுகாப்போடு முடிக்க காத்திருக்கும் நாம் அதே தேவ கரத்தின் பாதுகாப்பையும், வழி-நடத்தலையும் பெற ஆயத்தமாக வேண்டுமல்லவா?

இதற்கு முன் நாம் கடந்த வழியை பார்த்து கர்த்தரது கரத்திலிருந்து பெற்ற கிருபைக்காக, இரக்கத்துக்காக, தயவுக்காக அவருக்கு நன்றிகளை ஏறெடுத்தலே மிக அவசியம்.

அப்போஸ்தலன் பவுல்: ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கித் தொடருகிறேன். என்கிறார். பிலி 3:13,14. இதல்லவா கிறிஸ்துவுக்குள் எமது ஜீவிய முன்னேற்றம்! எம் ஆவிக்குரிய வளர்ச்சி!

அதே வேளையில் கடந்த கால தோல்விகள் எதிர்கால வெற்றிகளுக்கு தடையாயிராதபடிக்கு இவ்வருடத்தில் “பரிசுத்த வேதாகமத்தை” அதிகமாக வாசித்து அதை தியானியுங்கள். இதையே அப். யோவான் தனக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் “இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்-கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது” என்கிறார். வெளி, 1:3

காரியங்கள் அப்படியிருக்குமாயின் நாம் வேத வசனங்களை கவனமாக, அர்த்தத்தோடு தினசரி வாசிப்பதே அவசியமாகும். அப். பவுல் தனது ஆவிக்குரிய மகனை எச்சரிக்கிறார். “நீ நான் வரும் வரை வாசிப்பதில் மிக ஜாக்கிரதையாயிரு” என்று 1 தீமோ 2:13.

உங்களால் கவனிக்க முடிகிறதா? வெளி 1:3ல் வாசிக்கிறவனும் என ஒருமையில் குறிப்பிட்டிருக்கிறதை! இது தனித் தனி வாசிப்பும். தியானமும், பெலனுமாகும். ஏனெனில் இந்த தேவவார்த்தையே எமக்கு வேண்டிய பாதுகாப்பையும். வழிநடத்துதலையும், கண்டிப்பையும் கொண்டு வரும்.

எதிலிருந்து பாதுகாப்பு? இது ஆவி, ஆத்துமா, சரீர பாதுகாப்பாகும். பாவ-த்திலிருந்து, சோதனைகளிலிருந்து, உலகத்திலிருந்து, பிசாசின் தந்திரங்-களிலிருந்து துர் உபதேசங்களிலிருந்தே இந்த பரம பாதுகாப்பு, 1 யோவான் 5:18. 2016ல் ஒரு வெற்றிபாதையில் நடத்தப்பட தேவ வார்த்தையின் பாதுகாப்பு மிக அத்தியாவசியம்.

அடுத்து எப்படிப்பட்ட வழிநடத்தல்? ஏன் எங்களுக்கு போக வழிதெரியாதா? நாங்கள் குருடரா எனக்கூட நாம் யோசிக்கலாம்? அப்படியல்ல! உமது வசனமே என் கால்களுக்கு தீபமும். பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங். 119.105. “உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல” என தேவன் எச்சரிக்-

கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து-வானவரே வழியும். சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். வேதம் அவரையே காட்டுகிறது. அவரை சார்ந்திருக்கும் போது அவர் வழியை சரியாக காட்டுவார். வலப்புறம் இப்படி நட, இடது புறம் இப்படியாக நடவென "வார்த்தை"யாக இருந்து அவரே உணர்த்திக்கொண்டிருப்பார்! அப்படியாயின் தடுக்கும் கற்களை கூட தாண்ட உதவும் கல்லாக மாற்ற அவர் வல்லவராயிருக்கிறார் இந்த புது வருடத்தில் !

பல ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்யும் கப்பல், விமானம் போன்றவைகளுக்கு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். அது ஒன்று இயங்க தவறும் போது மற்றதை இயக்கி பயணத்தை தொடரவும், சேர வேண்டிய இடத்தை சென்றடையவுமே! உலகின் பல திசைகளிலிருந்து ஒரு நாட்டு துறைமுகத்தை அடையப்போகும் கப்பலுக்கு, வரும் சமயத்திலே உடனடியாக உள்ளே வர அனுமதி கிடைக்காது. பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டும். அந்நாட்களில் கூட இரவு பகலாக அந்த engine ஒவ்வொன்றும் இயங்க வேண்டும். இதை கடற்கறை ஓரங்களில் மின்சார குமிழ்கள் (bulb) எரிந்தப்படி நங்கூரமிட்டிருப்பதை பார்க்கிறோம். இதே போன்று வேத சத்தியங்கள், வாக்குத்தத்தங்கள் 2016 ல் உங்களை வழிநடத்தவும், பிரகாசிப்பிக்கவும் மிக உதவும் என்ற படியால் வாசியுங்கள்! உமக்கு விரோதமாக பாவம் செய்யாத-படிக்கு உம் வசனங்களை எனது இருதயத்தில் பத்திரப்படுத்தி இருக்-கிறேன் சங்கீதம் 119:11. ஆகவே அதிகப்படியான இயந்திரங்களை போன்று அதிக வசனங்கள் உங்களை வழிநடத்தட்டும், பாதுகாக்கட்டும்.

தொடர்ந்தும் அதே வார்த்தையானது உன்னை எப்பொழுதும் "கண்டித்து" உணர்த்தட்டும். இதற்கு இடம் கொடு. பாவத்திற்கு இடம் கொடுக்கும் போது தேவ வசனம் உன்னை எச்சரிக்கும். அவ்வேளையில் உன் மனதைக் கல்லாக்கிக் கொள்ளாதே. உடனடி-யாக மனம் திரும்பு. நீதி 29:13. வேத வசனமாகிய ஜலத்தில் உன்னைக் கழுவிக்கொள். அதுவே 2016ம் ஆண்டில் ஆசீர்வாதத்துக்கு முதற்படி!

என்னைப் பெலப்படுத்துகிற
கிறிஸ்துவினாலே இவ்வருடத்தில்
எனக்கு எல்லாம் கூடும்.
பிலி 4:13

இந்த ஓட்டத்தை எமக்கென்று
நியமித்திருக்கிறபடி கர்த்தராகிய
இயேசுவை நோக்கி பொறுமையோடே
ஓடக் கடவோம்.
எபி 12:1

ஆகவே சகலதும் வாய்க்க 07 நினைவுறுத்தல்கள் :

1. தேவ வார்த்தையை நன்றாக கேட்டு, கிரகியுங்கள்
2. தேவ வார்த்தையை வாசித்து, தியானியுங்கள்
3. கேட்டவைகளை, தியானித்தவை-களை கைக்கொள்ளுங்கள்
4. தாராளமாய் கர்த்தரது ஊழியத்-துக்கு கொடுங்கள்.
5. சபை ஐக்கியத்தில் கிரமமாக கலந்துக்கொள்ளுங்கள்.
6. கேட்டு கிரகித்து, வாசித்து தியா-னித்து கைக் கொண்டவைகள் மூலமாக ஆவிக்குள் வளருங்கள்.
7. புதுமனிதனை போஷித்து வளர்ச்சி அடையப்பண்ணி கனிகொடுத்தலின் ஜீவியத்தில் முதிர்ச்சியடையுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புதுவருட வாழ்த்துக்கள்.

-V.M. Samuel-




நாம் இப்போது இருப்பது நித்திய தேவனுடைய மகத்தான திட்டத்துக்குள்ளே. நாம் இதை முழுமையாக ஏற்றுக்கொண்டு நம்பி அதற்கேற்ற விதமாக வாழ வேண்டும். நாம் எதேச்சையாக ஏனோ தானோ என்று அல்ல தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோம். மாறாக தேவனுடைய முன்னறிவின் படியே இடம்பெற்ற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலேயே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

இயேசுவை நோக்கி, பொறுமையோடே ஓடக்கடவோம். நாம் ஓடுவோம். ஆம் நாம் பொறுமையோடே ஓடுவோம் எப்படி ஆண்டவராகிய இயேசுவையே நோக்கி, நாம் ஓடுவோம். ஆனால், ஆண்டவராகிய இயேசுவின் எந்த பக்கத்தை நோக்கி நாம் ஓட வேண்டும்?

“அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச்சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.” எபி 12:2. “சிலுவையைச் சகித்து” என்பதே இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, சிலுவையை சகித்த இயேசுவையே நோக்கி நாம் பொறுமையோடே ஓட வேண்டும். ஆகவே, இந்த புது வருடத்திலே தேவன் நம்மை அழைப்பது இலகுவான சுகமான வாழ்க்கைக்கு அல்ல. சிலுவையை சகித்த இயேசுவையே நோக்கிப் பாருங்கள். அது நமக்கு பொறுமையை, சகிப்புத்தன்மையை தரும்.

நமக்குள்ள தலைவர் சிலுவையை சகித்த ஒருவர். மத்தேயு 16:24 “ ஒருவன்

என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." அந்நேரத்திலே ஆயிரக்கணக்கானோர் அவரைப்பின் பற்றிய போதிலும் ஆண்டவர் இயேசு ஒரு நிபந்தனையை முன்வைக்கிறார்: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

தேவனுடைய முன்னறிவின் படி நாம் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது எதற்காக? சிலுவையை சகித்த இயேசுவையே நோக்கி நாம் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவதற்காகவே.

என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். சங் 2:8

சங்கீதம் 2ல் முதல் இரு வசனங்களும் சங்கீதக்காரன் சொல்பவை. மூன்றாம் வசனம் தேவனை அறியாத புறஜாதியாருடையது. 4ம், 5ம் வசனங்கள் மறுபடியும் சங்கீதக்காரனுடையது. 6ம் வசனத்தைச் சொல்பவர் யேகோவா தேவன் தாமே. 7லிருந்து 9வரை இருப்பது மேசியாவாகிய கிறிஸ்துவின் வார்த்தைகளே.

10லிருந்து கடைசிவசனம் வரையிலிருப்பது சங்கீதக்காரன் விடுக்கும் அழைப்பே.

முதலிரு வசனங்களும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய தீர்க்கதரிசனம் (அப்போஸ்தலர் 4:25). ஏழாம் வசனம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பற்றியது (அப்போஸ்தலர் 13:33). 8ம் வசனம் கிறிஸ்துவின் சுதந்திரம். இதுவே நமக்கு ஒரு வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டுள்ளது. மூடநம்பிக்கையுள்ள பூமியின் எல்லைகள் வரையிலுமுள்ள ஜாதிகள் யாவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சுதந்திரமாக கொடுக்கப்படுகிறார்கள்

"வெளி 5:8,9தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர், ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,"

பிதாவினால் குமாரனுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம இன்று நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். கிறிஸ்து இல்லாமல் அழிந்து போகும் ஒரு நாடு நம்மை சூழ்ந்துள்ளது, இதை நாம் சுவிசேஷமயமாக்க வேண்டும்.

வேதத்தை கையில் எடுங்கள்
வெளியே போங்கள்
மக்களுடன் கதையுங்கள்
சுவிசேஷத்தை சொல்லுங்கள்
வேதத்தை படிப்பியுங்கள்.
இதுவே நாம் செய்ய வேண்டியது.

# நிச்சயமான கிருபையும் ஆச்சரியமான கிரியையும் ...

சாட்சி

எனது பெயர் சஞ்ஜீவன். நான் ஒரு இந்து குடும்பத்தை சேர்ந்தவன். நான் சிறு வயதில் இருந்தே விக்கிரங்களை வணங்கி வந்தவன். எனது குடும்பமும் இந்து குடும்பத்தை சேர்ந்ததால் எங்களால் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ள முடியாமல் போனது.

நான் என் குடும்பத்துடன் பாட்டியின் விட்டுப்பக்கத்தில் தான் வசித்து வந்தோம். ஒரு நாள் நாங்கள் கீழ் டிவிஷன் என்ற இடத்துக்கு சொந்த வீடு வாங்கி அதற்கு குடி போக வேண்டியதாக இருந்தது. அன்றில் இருந்து தான் எங்கள் குடும்பத்தில் சண்டை மற்றும் அநேக பிரிவினைகள் ஏற்பட்டது.

வீடு மாறி சுமார் ஓர் வருட காலம் வீட்டில் சண்டையோ பிரச்சனையோ ஒன்றும் இல்லாமல் இருந்து பிறகு எனது அப்பா தினந்தோறும் வேலை செய்யும் பணத்தில் குடித்து விட்ட வீட்டுக்கு வந்து சண்டை போடுவார். இந்த பிரச்சனை தினந்தோறும் நடப்பதால், பக்கத்து வீட்டுடன் தினமும் சண்டை ஏற்படும். அங்கு சென்றதால் எனது பழைய நண்பர்களை சந்திக்க முடியாமல் விளையாடுவதற்கு யாரும் இல்லை. எங்கள வீட்டு பக்கத்தில் இருந்தவர்கள் எவரும் என்னுடன் பேச மாட்டார்கள்.

அப்பா செய்யும் சண்டை தாங்கிக்-கொள்ள முடியாத காரணத்தால் அம்மா ஒருநாள் வெளிநாடு செல்ல தீர்மானித்தார்கள். அம்மா வெளி-நாட்டுக்கு சென்றதால் நானும் என் தம்பி தங்கை ஆகியோரும் பாட்டி தாத்தாவுடன் தான் இருந்தோம். அப்போதும் அப்பா எங்கள் குடும்பத்-துடன் திரும்பவும் வந்து சந்தோஷமாய் இருந்தார். சுமார் இரண்டு வருடங்-களுக்கு பிறகு அம்மா வந்த போது இருவரும் சண்டை போட்டு பிரிந்தனர்.

ஒரு மாத காலம் அம்மா எங்களுடன் இருந்துவிட்டு திரும்பவும் வெளிநாட்டுக்கு போய்விட்டார். அப்பா எங்கள் வீட்டை விற்றுவிட்டு போய்-விட்டார். அப்போதும் எங்கள் மூவரையும் பாட்டி தாத்தா தான் பார்த்துக்கொண்டார்-கள். அப்பா வேறு ஒரு திருமணம் செய்ததால் என்னை யார் பார்த்தாலும் “இவன் அப்பா தான் வேறு திருமணம் செய்து போய் விட்டாரே” என்பார்கள். இதனால் எனக்கு யாருடனும் கதைக்க பிடிக்கவில்லை. பாடசாலை விட்ட பிறகு வீட்டுக்கு வந்து வீட்டிலே தான் இருப்பேன்.

என்னுடைய வாழ்க்கை ஒரு அனாதையான மாதிரி தான் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து என்னை தேடி வந்தார்.

எப்படியென்றால், நவீன் சகோதரன் மூலம், ஒருநாள் எனது பாட்டியின் தங்கை மரணமடைந்தார். வேறொரு மரண வீட்டுக்கு நவீன் சகோதரன் போகும் போது பாதை மாறி பாட்டியின் தங்கையின் மரண வீட்டுக்கு வந்து விட்டார். அன்று தான் என் பாட்டி ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்ச-

கராக ஏற்றுக்கொண்டார். அன்றில் இருந்து சிலைகளை வணங்குவதை விட்டு சபைக்கு செல்ல தீர்மானம் எடுத்தார். முதலில் பாட்டி மட்டுமே சபைக்கு சென்றாலும் பாட்டிக்கு துணையாக நான் தான் செல்ல நேர்ந்தது.

சில காலம் செல்ல செல்ல சபைக்கு செல்ல ஆவல் ஏற்பட்டது. இயேசு கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள ஆசை ஏற்பட்டது. ஆண்டவர் இயேசுவை என் சொந்த இரட்சகராக, வாலிபர் முகாமில் ஏற்றுக்-கொண்டேன். வெளிநாட்டிலிருந்து வந்த அம்மாவும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். எங்கள் குடும்பத்துடன் பாட்டியின் வீட்டில் சந்தோஷமாக இருந்தோம். நான் சாதாரண தர பரீட்சையை முடித்து விட்டு நவீன் சகோதரன் மூலம் வெள்ளவத்தையில் இருக்கும் சபைக்கு வந்து தங்கினேன்.

சபையில் இருக்கும் போது மூன்றாம் மாதம் 22ம் திகதி ஞான-ஸ்நானம் எடுத்தேன். அன்றைய தினத்தில் ஞானஸ்நானம் எடுக்கும் போது யோசுவா 1:9ம் வசனம் வாக்குத்தத்த வசனமாக கொடுக்கப்-பட்டது. இவ்வசனம் என் வாழ்க்கைக்கு தைரியம் கொடுக்கும் முகமாக இருக்கிறது. சபையில் அனேக நண்பர்கள் கிடைத்தனர். இதன் மூலம் என் வாழ்க்கையில் இருந்த பழைய நினைவுகள் அனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக மறக்க முடிகிறது.

இயேசு கிறிஸ்து என்னை எதற்காக தெரிந்துகொண்டாரோ அதை என் வாழ்க்கையில் நிறைவேற்றும் படி காத்திருக்கிறேன்.

# தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்படி சற்றே தரித்து நில்

அவர்கள் பட்டணத்தின் கடைசி-மட்டும் இறங்கி வந்தபோது, சாமுவேல் சவுலைப் பார்த்து: வேலைக்காரனை நமக்கு முன்னே நடந்துபோகச் சொல் என்றான். அப்படியே அவன் நடந்து போனான். இப்பொழுது நான் தேவ-னுடைய வார்த்தையை உனக்குத் தெரிவிக்கும்படிக்கு, நீ சற்றே தரித்து நில் என்றான். 1 சாமுவேல் 9:27

காணாமல் போன கழுதைகளைத் தேடிச்சென்ற சவுல் என்ற மனிதனுக்கு சாமுவேல் என்ற தேவனுடைய மனிதன் கூறிய வார்த்தை இதுவேயாகும்

இன்றைய நவநாகரீகமும், நவீன உலகின் வேகமும் தேவனுடைய மக்களையும் தன் பக்கம் இழுத்து அவர்கள் தேவனுடைய வார்த்தையை நேரம் செலவழித்து வாசிக்கவோ, அல்லது தேவனுடைய வார்த்தையை கேட்கவோ முடியாதபடி தடை செய்கின் றன. ஆகிலும், சிலர் தேவனுக்குப் பயந்து அனுதினமும் நேரத்தை ஒதுக்கி தேனுடைய வார்த்தையை வாசிக்கவும் அதைக் கேட்கவும் செய்கின்றனர். அவர்களுக்காக நாம் தேவனைத் துதிப்போம்.

தேவனுடைய வார்த்தை என்பது பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இந்த வேதாகமமானது எமது தாய்மொழியில் வாசிக்க எமக்குக் கிடைத்தது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். வேதாகமம் எமது சொந்த மொழியில் கிடைப்பதற்காக எவ்வளவோ பரிசுத்-தவான்கள் தங்கள் நேரத்தையும், பணத்தையும் ஏன், தங்கள் ஜீவனையும் பாராது அர்ப்பணித்துள்ளனர். மற்றும் உலகிலுள்ள அநேக மொழிகளில் வேதாகமமானது அச்சிடப்படவில்லை ஆதலால், இவைகளை கருத்தாய் சிந்தித்து எம்மீது கொண்ட அன்பினால், கிருபை பாராட்டி நாம் அவரை அறியவும், அவரின் சித்தத்தை செயல்படுத்த வேண்டும் என்பதற்காக தேவன் தாமே எமது கரங்களில் தந்துள்ள தேவனின் வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தை இப்புதிய வருடத்தில் வாசிக்கத் தீர்மானிப்போம்.

1. தேவனுடைய வார்த்தையை அதிகாலையில் வாசிப்பதும், தியானிப்-பதும் சிறந்த முறையாகும்.
யாத்திராகமம் 34:3, 19:9-11
உபாகமம் 4:12, ஏசாயா 30:20,21

பாடுகளும், வேதனைகளும், போராட்டங்களும், தேவைகளும் அதிகமாக காணப்படும் இவ்வுலகில் வாழும் நாம் அதிகாலையிலேயே எழும்பி தேவனைத் துதித்து அவரது வார்த்தைகளை வாசிப்பதும், தியானிப்-பதும் நமது உள்ளத்திற்கு மிகுந்த ஆறுதலும், சமாதானமுமாய் இருக்கும்.

தங்கள் வாழ்வில் பெரும் நெருக்கங்களையும், துன்பங்களையும் எதிர் கொண்ட அநேக மனிதர்களும் தேவனுடைய வார்த்தை மூலம் பெலப்பட்டிருக்கின்றனர்.
சங் 119:147,148,
அப்போ 27: 20 -25

2. வேதாகமத்தை வாசிப்பதன் மூலம் பெறும் இரண்டாவது நன்மை: நாம் வாழுகின்ற சூழலில் மக்கள் அநேக தேவர்களை வணங்கி வரும்போது உண்மையான ஜீவனுள்ள சிருஷ்டிக் கரத்தரை எமக்கு அறியத்-

தருவது தேவனுடைய வார்த்தையாக-ிய வேதாகமம் மட்டுமே.
யோவான் 5:39, அப்போ 17:24-31

எனவே, நீங்கள் ஒரு வேளை இவ்வுலகில் வாழும் மக்கள் போன்று பல தெய்வ வழிபாடு உள்ளவராக இருந்தால் அவைகளிலிருந்து விடுபட்டு ஜீவனுள்ள மெய்த்தேவனை அறிய விரும்பினால் இன்றே எம்மோடு தொடர்பு கொண்டு (077- 3595533) ஒரு வேதாகமத்தினைப் பெற்று, அதனை தினமும் வாசித்து தேவனால் மட்டுமே செயலாற்றக் கூடிய பாவமன்னிப்பாகிய ஆத்தும மீட்பை பெற்றுக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

மெய்த்தேவனாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே உங்கள் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து இன்றும் வாழ்கின்றார். இதனை விசுவாசித்து உங்கள் வாயினால் அறிக்கை பண்ணுங்கள். அப்பொழுது நீங்களும் உங்கள் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீரகள்.

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். ரோமர் 10:9,10,11

1 கொரிந் 15:3,4
அபபோஸ்தலர் 16:31

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! நம்முடைய பிதாவாகிய தேவனாலும்கர்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

உங்கள் சகோதரனும், கிறிஸ்துவின் ஊழியன்

**சகோ. சேவியர்**

# குதூகலமான கிறிஸ்துமஸ்

*– சகோ. ஆ. ஞானேந்திரன் –*

கிறிஸ்துமஸ் என்பது இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாள் விழாவா? என்று கேட்டால், இல்லை! என்பதே ஒரே பதிலாகும். ஏனென்றால், இயேசுவானவர் டிசெம்பர் 25 ஆம் திகதியில் பிறந்ததற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை. அப்படியென்றால் கிறிஸ்துமஸ் விழாவின் நோக்கம்: அல்லது அதன் பொருள் என்ன?

சகலத்தையும் படைத்து ஆண்டு நடத்தும். சர்வ வல்லமையுள்ள கர்த்தர், மனிதனாக "இயேசு" என்ற பெயரில் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதை கொண்டாடுவதே கிறிஸ்மஸ் பண்டிகையாகும்.

"கிறிஸ்மஸ்" என்ற வார்த்தைக்கு "கிறிஸ்துவைக் கொண்டாடுதல்", அல்லது "கிறிஸ்துவின் தெய்வீகத்தை தியானித்தல்" என்பதே அர்த்தமாகும்.

இன்று உலகில் பெரும்பாலான மக்கள் கொண்டாடுவதுபோல் அது ஒரு கேளிக்கை விழாவோ, களியாட்ட விழாவோ அல்ல. மாறாக, பாவிகளின் பதலாளாக இந்தப் பூமியில் அவதரித்து சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு எழுந்தருளி மீண்டும் சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக இப்பூமிக்கு வரப்போகின்ற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வாழ்வில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதும் அவர் அருளும் பாவ மன்னிப்பையும், நிலைபேறான வாழ்வையும் பெற்று அனுபவிப்பதையும் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்ற நாமத்தையுடைய அவருடைய தெய்வீகத்தைத் தியானித்து ஆராதிப்பதுமே கிறிஸ்துமஸ் பண்டிகையின் பிரதான நோக்கமாக அமைகிறது.

# மீட்பின் அவசியம்

உலகம் மீட்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கிறது என்பதனை அறிவோம். இயேசு உலக இரட்சகராப் பிறந்தார் யோவான் 4:42. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறவராகப்பிறந்தார். யோவான் 1:29

எல்லோரும் பாவிகள் என்றும், நல்லவன் ஒருவனும் இல்லையென்றும் தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் இல்லை, எல்லோரும் ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் என்றும் வேதம் மனிதனின் பாவ நிலைமையைக் காண்பிக்கிறது.

எல்லாரும் பாவஞ்செய்து, தேவ
மகிமையற்றவர்களானார்கள்.
ரோமர் 3: 23

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்-களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நாம் பாவஞ்செய்யவில்லை என்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது 1 யோவான் 1:8,10

பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான் நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1 யோவான் 3:4

பாவம் இருவகைப்படும்.

1. **பிரவேசித்த பாவம்**: ரோமர் 5:12ன் படி முதல் மனிதனாகிய ஆதாமின் மூலம் முழு உலக மக்களுக்கும் இப்பாவம் பிரவேசிக்கிறது. ஆகவே தான், பிறக்கிற ஒவ்வொரு மனிதனும் பாவியாகவே பிறக்கிறான். சங்கீதம் 51:5

2. **செய்கின்ற பாவம்**: எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால் என கூறப்படுகிறது. 1 யோவான் 1:10ல்நாம் பாவம் செய்யவில்லையென்போமானால் தேவனை பொய்யராக்குகிறோம். ஆகவே, மனிதர்கள் யாவரும் பாவம் செய்கிற-வர்களாய் இருக்கிறார்கள்.

ஆகவே இப்படி பாவம் செய்வதின் விளைவு என்னவென்று நோக்கினால்:

1. தேவனை விட்டு பிரிந்த நிலை. ஆதியாகமம் 3:8, ஏசாயா 59:2
2. தேவனுடைய சாபம் வருகிறது. ஆதியாகமம் 3: 16 -19
3. நித்திய நியாயத்தீர்ப்பு உண்டானது. வெளிப் 20:11,12
4. நித்திய தண்டனையான நரகம். 2 தெசலோனிக்கேயர் 1:10
5. தேவன் தரும் சந்தோஷத்தை இழந்து போவது. இது தேவனுடைய வார்த்தையின்படி, அவருடைய வாக்குத்தத்தங்களின்படி இழந்துபோன

சந்தோஷத்தை கிறிஸ்துமூலமாய் பெற்றுக்கொண்டமை, ஏற்கனவே மனிதன் தேவ சந்தோஷத்தை இழந்ததை காண்பிக்கிறது. அவருடைய குணவியல்புகள் ஆகியவற்றில் உண்டாகும் சந்தோஷத்தைஇழந்து போனதாகும்.

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போ 2:41

6. தேவ சமாதானத்தை இழத்தல்: ரோமர் 5:1: இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

7. உலகத்தின் ஆளுகைக்குட்படல். 1 யோவான் 2:16ன்படி, கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, வாழ்விற்குரிய பெருமை இவைகளால் ஆளுகைக்குட்படுதலாகும்.

8. பிசாசின் ஆளுகைக்குட்படல்: 1 யோவான் 3:8 பாவஞ் செய்கிறவனிடத்தில் பிசாசின் ஆளுகை இருக்கிறது. 1 யோவான் 5:19ன் படி உலகம் முழுவதும் பிசாசுக்குள் இருக்கிறபடியால், எல்லோரும் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பாவத்தினுடைய பயங்கர நிலை என்னவென்றால், மனந்திரும்ப முடியாமை. வெளிப் 9:20, 16: 9 - 11. இவ்வார்த்தையில் மக்கள் தண்டிக்கப்பட்டு மிகுந்த வேதனையடைந்தும் கூட பரலோகத்தின் தேவனைத் தேட மனதில்லாமல் அவரைத் தூஷிப்பதையும் தங்களது வீணான விக்கிரகங்களில் நம்பிக்கை வைப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட கொடிய நிலையிலிருந்து நம்மைத் தேவனாகிய கர்த்தர் மீட்டுக்கொள்ளவே தமது ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். ஆகவே, தேவன் நமக்குக் கொடுத்த இரட்சிப்பைக்-குறித்து நாம் எச்சரிக்கையாக வாழ்வோமாக!

- சகோதரி விஜி பெனுவேந்தூர் -

# தேவனின் வாக்குத்தத்தம்

~சகோதரி திலகா~

எப்பிராத்தா என்னபட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. மீகா 5:2

தேவனுடைய வல்லமை அல்லது ஆசீர்வாதம் எண்ணிக்கையின் அடிப்படையில் வரவேண்டுமென்று அவசியமில்லை என்கிற சத்தியம் ஒரு தனிநபர் வாழ்க்கைக்கு, ஒரு சிறு குழவினருக்கு, ஒரு சிறு ஊழியத்தை ஆரம்பிப்பவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் தைரியத்தையும், மனமகிழ்ச்சியையும் கொண்டுவரவேண்டும்.

ஆதியாகமம் 25ம் அதிகாரத்தை மட்டும் நன்கு கவனிப்போமேயானால் அதில் நாம் மூன்று பெண்களைக் காணவேண்டும்.. கேத்தூராள், ஆகார், ரெபேக்காள், ஆனாலும் இவர்களுக்கு முதலாவதாக இருக்க வேண்டியவள் சாராளே ஆகும். அவளுக்கு ஒரே மகன் ஈசாக்கு. இரண்டு பேரன்கள் மட்டுமே. ஆனாலும், கேத்தூராள், ஆகாருடைய பிள்ளைகளின் வம்சங்கள் யாவரும் ஆபிரகாமுடைய வழித்தோன்றல்கள் ஆவார்.

இந்த அதிகாரத்தில் கேத்தூராளின் மகன்மார், பேரர், பேரன்மாருடைய பிள்ளைகள் மொத்தம் 16 பேர் ஆவர். ஆகாரின் மகன்மார், பேரன்கள் மொத்தம் 13 பேர் குறிப்பிடப்பட்டு உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட கேத்தூராள், ஆதாளுடைய சந்ததியினர் யார், யார் என்று நமக்கு ஆராய வேண்டிய அவசியமில்லை.

ரெபேக்காளுக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈசாக்குக்கு கிடைத்த வாக்குத்தத்தத்தை நன்றாக கவனித்துப்பாருங்கள் நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்.

ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.
ஆதி 26: 3-5

யாக்கோபின் சந்ததியான யூதர்கள் வழியாகவே நாம் இரட்சிப்பை

பெற்று தேவனுடைய ஆசீரவாதத்தை சுதந்தரித்துக் கொண்டோம்.

அதுதான் தேவனுடைய வாக்குத்தத்தின் வல்லமை.

எனவே, தேவனுடைய பிள்ளையே! சபைக்குள்ளும், வெளி உலகத்திலேயும் மற்றவர்களுக்கு உள்ள ஆசீர்வாதங்களைக் கண்டு, பெரிதான எண்ணிக்கையைக் கண்டு நாம் அதைரியப்படவோ, பொறாமைப்படவோ அவசியயில்லை. சாராளுடைய குணாதிசயத்தைப் பாருங்கள்.

சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். உபாகமம் 7:7

ஆண்டவரின் குறைந்த பட்ச வேண்டுகோள்: உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18: 19,20)

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| மு.ப. | 8.15 | - | ஞாயிறு பாடசாலை |
| மு.ப. | 9.30 | - | ஆராதனை வேளை |
| பி.ப | 1.30 | - | வாலிபர் கூட்டம் |
| பி.ப. | 4.00 | - | சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி) |
| பி.ப. | 6.00 | - | சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி) |

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!





# உருவாட்டம் முதல் உருமாற்றம் வரை



மாற்கு 5: 1 - 20

**அறிமுகம்**

இவ்வேதபகுதியானது பிசாசு பிடித்து பெரும் வேதனை வாட்டத்தோடு இருந்த ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்து குணமடைந்து தன் வாழ்வில் மாற்றத்தை அனுபவித்த கதையாகும். வாழ்வில் உண்மையான மாற்றம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திப்பதால் மட்டுமே கிடைக்கும். வேறெதினாலும் வாழ்க்கையில் மாற்றத்தைக்கொண்டுவர முடியாது.

2 கொரிந்தியர் 5:17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

உங்களுக்கு வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டும் என்றால், நீங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்திக்க வேண்டும். இம்மனிதன் குணமடைவதற்கு முன் இருந்த நிலைமையைப் பற்றிய விபரமானது, பாவத்தில் இருப்பவர்களுடைய நிலைமையை ஆவிக்குரிய கருத்தில் வெகுவாக ஒத்திருக்கிறது. அதேபோல, அவன் குணமடைந்ததற்கு பின்பதான விபரமும் ஒரு விசுவாசியில் காணப்பட வேண்டிய குணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

### வேதனைப்படுத்தப்பட்ட மனிதன்

1. **கல்லறை வாசி** - வசனம் 3
2. **சங்கிலி உடைப்பான்** - வசனம் 3,4
3. **மலை சஞ்சாரி** - வசனம் 5
4. **தன்னழிப்பான்** (தன்னைத்தானே அழித்துக்கொள்பவன்) - வசனம் 5
5. **மதரீதியாக கதைப்பவன்** - வசனம் 7

### மாற்றப்பட்ட மனிதன் - வசனம் 15 - 20

1. **ஐக்கியம்** - இந்த மனிதன் குணப்பட்ட பின்பு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடும் அவரது சீஷரோடும் காணப்பட்டான் வசனம் 15. இது, இரட்சிக்கப்பட்ட ஒருவன் கொள்ள வேண்டிய ஐக்கியத்தின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட ஒருவன் அந்நியோந்நிய ஐக்கியத்தில் நிலைத்திருப்பது அவசியமாகும். அப்போஸ்தலர் 2:42, எபிரேயர் 10:25. ஐக்கியம் என்பது மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

**1. சமுகமளித்தல்**

முதலாவதாக, ஐக்கியம் கொள்வதற்கு சபைக்கூட்டங்களுக்கு சமுகமளிக்க

வேண்டும். ஆனால் இன்று, கூட்டங்களுக்கு வராமலிருப்பது இலகுவான காரியமாயிற்று. இப்படி நடந்தது அல்லது நடக்கவில்லை, இவ்வாறு சொன்னார்கள் அல்லது சொல்லவில்லை போன்ற சாக்கு போக்குகளை சாட்டி நாம் சபைக்கூட்டங்களுக்கு வருவதைத் தவிர்த்து விடுகிறோம். ஆனால் நாம் ஒன்று கூடும் போது நம்மோடு ஐக்கியம் கொள்வதற்கு ஆவலுடன் காத்திருக்கிறார். வரவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருப்பின், வராமலிருப்பதற்கு அல்ல வருவதற்கான வழிகளையே தேடுவீர்கள். பிரசங்கி யாராயினும், எவர் என்ன சொன்னாலும் செய்தாலும் வருவீர்கள். பலர், தொழிலுக்கு குறித்த நேரத்துக்கு தவறாமல் சமுகமளிப்பார்கள் ஆனால் சபைக்கு அல்ல. ஆனால் நாம் புரிந்து கொள்ள வேண்டும் சபைக்கூட்டங்களுக்கு சமுகமளித்து தேவனோடு ஐக்கியம் கொள்வதின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**2. தொடர்புகொள்தல்**

சமுகமளித்தால் மட்டும் போதாது, ஒவ்வொருவரோடும் தொடர்பு கொள்ளவதும் ஐக்கியத்தில் முக்கியமானதாகும். அனேகர், தங்கள் வருகையை பதிவு செய்ய விரும்புவார்களே ஒழிய மற்றவர்களுடன் ஒரு தொடர்பும் கொள்ள மாட்டார்கள். ஒவ்வொருவரோடும் நாம் பேசும் போது, மற்றவரின் பாரத்தை அறிந்து அவர்களுக்காக ஜெபிக்கவும் நம் பாரங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவும் முடிவதுடன் மற்றவர்களிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம்.

கர்த்தரின் நாமத்தில் ஒன்று கூடுகிறோம் என்று சொல்லிக்கொண்ட போதிலும் மற்றவருடன் தொடர்பு கொள்ளாத அளவுக்கு சபைக்குள்ளே பிரிவினைகள் காணப்படுகின்றன. ஒவ்வொருவருடனும் நம்மால் சுதந்திரமாக தொடர்புகொள்ள முடியவில்லை என்றால், நம்மால் உண்மையான ஐக்கியம் கொள்ள முடியாது. மற்றவரை குறை சொல்லாமல், நீங்களே முதலில் செயற்பட்டு மற்றவரோடு இடைப்பட்டு ஐக்கியத்தை சந்தோஷமாய் அனுபவியுங்கள். எனவே, தொடர்பு கொள்ளுதல் ஐக்கியத்தின் முக்கிய அம்சமாகும்.

**3. சந்திப்பு**

ஐக்கியத்தில் நாம் செல்லும் இரண்டாம் மைல் தான் ஒருவரை ஒருவர் சந்திக்கச்செல்தல். இது ஊழியக்காரர் மட்டுமோ அல்லது சபைத்தலைவர்கள் மட்டுமோ செய்ய வேண்டிய வேலை அல்ல. உண்மையில், இவர்கள் பெரிதான பாரத்தை சுமக்கிறவர்களாதலால், இவர்களும் விசுவாசிகளால் சந்திக்கப்பட வேண்டியவர்கள். இன்று பலர் தங்களை சபையிலிருந்து ஒருவரும் பார்க்க வரவில்லையென குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால், சற்று சிந்தித்து பாருங்கள் நீங்கள் எப்போது இன்னுமொரு விசுவாசியை, உங்களை ஆவிக்குரிய ரீதியல் வழிநடத்துகிறவரை சந்தித்து அவர்களை தைரியப்படுத்தியுள்ளீர்கள் என்று!

ஒவ்வொருவரை சந்தித்து தைரியப்படுத்துவதிலே நாம் ஒவ்வொருவரும் ஈடுபடுவோம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். விசுவாசிகளைச் சந்திக்க சென்று, இன்னுமொரு விசுவாசியையோ சபைத்தலைவர்களையோ பற்றி கிசுகிசுக்களை பேசாமல், அவர்களின் குறைகளைக் கதைக்காமல் பக்திவிருத்திக்கு ஏதுவானவைகளை மட்டுமே பேசுவோம். விசுவாசியையோ சபைதலைவர்களையோ தவறாக பேசும் எவரையும் உங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளாதிருங்கள்.

பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன் (சங் 101:5)

என்பதே தாவீதி அனுபவமாயிருந்தது.

ஆகவே அருமை சகோதரனே, சகோதரியே, ஐக்கியத்தை பற்றிய பாடத்தையும் அதின் முக்கியத்துவத்தையும் நாம் கற்றுக்கொண்டு, தேவனோடும் அவர் ஜனங்களோடும் உறுதியாய் தரித்திருப்பதன் முலம் மாற்றப்பட்ட வாழ்வின் தோற்றம் சான்றாய் தென்படட்டும்.

# கேள்வி - பதில்

### கேள்வி

1 நாளாகமம் 28:9ல் "அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" என்று உள்ளதே, ஆண்டவர் உண்மையில் அப்படி என்றென்றைக்கும் கைவிடுவாரா?

### பதில்

ஆம், ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடுவார். ஏன் எப்படி என்று பார்க்க முன் நாம் ஒரு விடயத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ, அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. இந்த நிச்சயம் இல்லையென்றால் வேதத்தினால் எவ்வித பயனும் இராது.

1 நாளாகமம் 28:9ல் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனை, "நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" என்பதே. ஆகவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட நாம் கலங்க தேவையில்லை. அவருக்குள் நாம் பெற்ற இரட்சிப்பு நித்தியமானது (எபிரேயர் 5:9). ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் அவர் வேண்டாம் என விட்டுவிட்டவர்கள் எவர்களோ, அவர்கள் யாவரும் என்றென்றைக்கும் கைவிடப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். யோவான் 5:24, யோவான் 10:28,29. எபிரேயர் 7:25, யோவான் 17:12.

உங்கள் கேள்விகள்
சந்தேகங்களையும் எங்களுக்கு
எழுதி அனுப்பிவைக்க
தயங்காதிருங்கள்.

# சத்தியமாய் சாத்தியமா?

## சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல வாழ்வது தற்கால உலகத்துக்கு பொருந்தாது என்பதே இன்றைய நவீன யுகத்தில் வாழும் நம்மில் பலரது குறிப்பாக இளைஞர்களது எண்ணமும் கருத்துமாகும்.

எபிரேயர் 11ல் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியல் நமக்கு நினைவுறுத்துவது நாமும் அவர்களைப்போல வாழ வேண்டும் என்பதையே.

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்.

வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள், வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள், உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.

பழைய ஏற்பாட்டில் மாத்திரம் அல்ல. புதிய ஏற்பாட்டிலும் கர்த்தருக்காக வைராக்கியமாய் வாழ்ந்து பாடனுபவித்தோரை நாம் மறந்து விட முடியாது. கல்லெறியப்பட்ட கொடூரமாய் கொலைசெய்யப்பட்ட முதல் இரத்த சாட்சி எனும் பெருமைக்குரிய வாலிபன் ஸ்தேவான் முதற்கொண்டு, சிரச்சேதம் செய்யப்பட்ட யாக்கோபு உட்பட புதிய ஏற்பாட்டு விசுவாசிகளின் பாடுகளும் நாம் அறியாதவை அல்ல.

பவுல் கூறும் அவனது அனுபவங்களைப் பாருங்கள். “நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன், மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிராயணம்பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும்,

வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?

வேதாகம காலத்தில் மாத்திரமல்ல, அதன் பின்பு வாழ்ந்த கிறிஸ்தவர்ளும் இன்று வரையிலும் பாடனுபவித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2 தீமோத்தேயு 4:12


கி.பி. முதல் ஐந்து நூற்றாண்டுகளிலே, பத்து பெரும் உபத்திரவங்கள் இடம்பெற்றதாக கருதப்படுகிறது.

கிறிஸ்தவனாய் வாழ்வதில் இத்தனை பாடுகள் என்றால் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வது சத்தியமாய் சாத்தியமா?

தொடரும்........

ஆதாரம்:
எபிரேயர் 11:33-38

# குறுக்கெழுத்துப் புதிர்



**இடமிருந்து வலம்**

1. இயேசு கிறிஸ்து பிறந்த நாற்பதாம் நாள் அவரை அர்ப்பணிக்க தேவாலயத்துக்கு கொண்டுவரும் போது அங்கிருந்தவர்களில் ஒருவர்.

4. வெளி 7ல் இல்லாத கோத்திரம்

5. கல்யாணம் என்றதும் ஞாபகத்துக்கு வரும் ஊர்

6. மரித்த தன் மகளை மீண்டும் உயிருடன் பெற்ற ஜெபஆலயத்தலைவன்

7. புழு புழுத்து இறந்த அரசன்

14. கர்த்தரின் சித்தத்தை அறிய உதவியது

15. இரு பெயர் கொண்ட சீஷர்களில் ஒருவன்

**மேலிருந்து கீழ்**

1. சீஷன் சுமக்க வேண்டியது

2. பிரதான தூதன்

3. ஒரு மரத்தினிமித்தம் எரிச்சலாய் இருந்த தீர்க்கதரிசி

4. இஸ்ரவேலின் மூன்றாம் அரசன்.

7. ஏழாம் மாதம் (1 இராஜா 8)

8. சவுலின் கோத்திரம்

9. வழியருகே பிச்சை கேட்ட குருடன்

10. எதிரி

11. மரத்தின் தன்மை அறிய உதவும்

12. பேதுருவல்லாத சீமோனின் அடைமொழி

13. வாலவயதின் குமாரர்13.

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**


**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................


ஜீவ ஒளி
கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு:
Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com